**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வள்ளியூர்**
**முன்னிலை: திரு.பி. மோசஸ் ஜெபசிங், பி.எஸ்சி. , பி.எல்.,**
நீதித்துறை நடுவர், வள்ளியூர்
2026 வது வருடம், ஜூன் மாதம், 30 –ம் நாள் செவ்வாய்கிழமை
**குற்றவியல் பல்வகை மனு எண். 476/2026**
**in**
**சிஆர்எம்பி. எண். 171/2026**
**in**
**குற்ற எண். 171/2025**

வெங்கடேசன், த/பெ. ஆறுமுகம் ......மனுதாரர்/ நகை உரிமையாளர்

// எதிராக//

தமிழ்நாடு அரசுக்காக
காவல் உதவி ஆய்வாளர்,
பழவூர் காவல்நிலையம். ....எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர்

இம்மனுவானது 30.06.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்து, அரசு தரப்பிற்கு அறிவிப்பு அனுப்பி பதில் பெறப்பட்டு, மனுதாரர் தரப்பில், அவரது கற்றறிந்த வழக்கறிஞர் திரு. S.P. மாரியப்பன் அவர்களும், அரசு தரப்பில், இந்நீதிமன்ற அரசுத்துறை குற்றவியல் வழக்கறிஞர், வள்ளியூர் நிலை–2, அவர்களும் ஆஜராகியும், ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**உத்தரவு**

1. இம்மனுவானது மனுதாரர்/ உரிமையாளர் தரப்பில் நிபந்தனையை மாற்றியமைக்கக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுவின் சுருக்கம்**

2. இம்மனுவானது மனுதாரர்/ புகார்தாரர் தரப்பில் நகையை திரும்ப பெற கோரிய மனு உத்திரவு நிபந்தனையை மாற்றம் செய்யக்கோரி இம்மனுவினை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரருக்கு சொந்தமான நீதிமன்ற காவலில் உள்ள 143.600 கிராம் எடையுள்ள தங்க நகைகளை திரும்ப பெறக்கோரி மனுதாரர் இந்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து அம்மனுவானது ரூ. 5,00,000/– த்திற்கு இரண்டு பிணையதாரர்களை ஆஜர்படுத்தவேண்டும் என்ற நிபந்தனையுடன் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. மேற்படி நகைகளை நீதிமன்றத்தில் இடைக்காலமாக திரும்பபெற மனுதாரரால் ரூ. 5,00,000/– த்திற்கு இரு தனிநபர் ஜாமின்தாரர் தயார் செய்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. மேற்படி ஜாமீன்தாரர் கிடைக்கவில்லை

என்பதால் மனுதாரரால் அவரது நகைகளை திரும்ப பெற இயலவில்லை. எனவே ரூ. 5,00,000/– த்திற்கு சொந்த பிணையை ஏற்று மேற்படி உத்தரவில் பிறப்பிக்கப்பட்ட நிபந்தனை எண். 2 ஐ மாற்றியமைக்ககோரி மனுதாரரால் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. எதிர்மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்ட ஆட்சேபனையில், நிபந்தனைகளை மாற்றம் செய்தால் வழக்கு சொத்தினை விற்கவோ, உருமாற்றம் செய்யவோ, வழக்கின் நீதிமன்ற விசாரணைக்கு ஆஜர்படுத்தாமல் இருக்கக்கூடும் என்பதாலும் வழக்கு சொத்தினை மனுதாரர் வசம் ஒப்படைக்க கடுமையான ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது.

4. இருதரப்பும் கேட்கப்பட்டது. மனு, மற்றும் வழக்கு ஆவணங்கள் பார்வையிடப்பட்டு கவனமாக பரிசீலிக்கப்பட்டது. வழக்கின் தடயப்பொருட்கள் கடந்த 18.02.2026 அன்று கைப்பற்றப்பட்டுள்ளது. மனுதாரர் தாக்கல் செய்த மனுவானது கடந்த 07.03.2026 அன்று நிபந்தனையுடன் அனுமதிக்கப்பட்டுள்ளது. நாளது தேதி வரை மனுதாரர் உரிய ஜாமீன்தார் சமர்ப்பிக்கவில்லை. இந்நிலையில் இம்மனு தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் அசல் வழக்கில் புகார்தாரர்.

5. இவ்வழக்கு பொருண்மைகளிலிருந்து, வழக்கின் தன்மையைக் கருத்திற்கொண்டும், மேற்படி உத்தரவில் பிறப்பிக்கப்பட்ட நிபந்தனை எண். 2ல் குறிப்பிட்டுள்ளபடி ரூ. 5,00,000/– த்திற்கு இரு நபர் பிணையதாரர் காண்பிக்கவேண்டுமென்பது மிகையாக உள்ளது என்று மனுதாரர் தரப்பில் வாதம் வைக்கப்பட்டுள்ளதாலும், இந்த மனு அனுமதிக்கப்பட்டு, Crlmp எண். 171/2026 இல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவில், பிணை நிபந்தனை எண். 2 பின்வருமாறு மாற்றியமைக்கப்பட்டு ரூ. 5,00,000/– த்திற்கான சொந்த பிணைமுறி காண்பிக்கவேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. மற்ற நிபந்தனைகளில் எந்த மாற்றமும் இல்லை.

**முடிவாக இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2026ம் ஆண்டு ஜுன் திங்கள் 30 ம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**ஒம்/– பி. மோசஸ் ஜெபசிங்,**
**நீதித்துறை நடுவர்,**
**வள்ளியூர்.**